மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கோயம்புத்தூர்

ந.க. 30089/2021/2021/ஓ3

நாள்: 14.02.2022.

## பத்திரிக்கை செய்தி

## "எனது வாக்கு எனது எதிர்காலம் - ஒரு வாக்கின் வலிமை" என்ற தலைப்பில் இந்திய தேர்தல் ஆணையத்தால் ஆன்லைன் மூலமாக நடத்தப்படும் தேசிய வாக்காளர் விழிப்புணர்வுப் போட்டிகளில் 15.03.2022 -ம் தேதிக்குள் பங்கேற்று, ரொக்க பரிசுகளை வென்றிட கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அழைப்பு

இந்தியத் தேர்தல் ஆணையம், ஒவ்வொரு வாக்கின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக, **"எனது வாக்கு எனது எதிர்காலம் - ஒரு வாக்கின் வலிமை"** என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு ஆன்லைன் மூலம் தேசிய வாக்காளர் விழிப்புணர்வுப் போட்டிகளை அறிவுத்துள்ளது. இப்போட்டிகளில் அனைத்து வயது பிரிவினரையும் பங்கேற்கச் செய்வதன் வாயிலாக மக்களாட்சியின் முக்கியத்துவத்தை அனைத்து தரப்பு மக்களிடமும் கொண்டு செல்வதற்காக இந்திய தேர்தல் ஆணையம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மக்களாட்சியில் ஒவ்வொரு வாக்கும் முக்கியமானது என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு பொதுமக்களிடமிருந்து ஏராளமான படைப்புகள் வரவேற்கப்படுகிறது.

1. **மையக்கருத்து : "எனது வாக்கு எனது எதிர்காலம் - ஒரு வாக்கின் வலிமை"**
2. தேசிய அளவிலான போட்டிகள், வினாடி-வினா போட்டி, வாசகம் எழுதும் போட்டி, பாட்டுப் போட்டி, காணொலி காட்சி உருவாக்கும் போட்டி மற்றும் போஸ்டர் வடிவமைப்புப் போட்டி என ஐந்து பிரிவுகளில் நடைபெறுகிறது.

### அ. வினாடி வினா போட்டி (Quiz Contest) :

நாட்டின் தேர்தல் செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வினை அளவிடும் பொருட்டு நடத்தப்படுவதால் அனைவரும் ஆர்வமுடன் கலந்து கொள்ள வேண்டும். இப்போட்டியில் மூன்று நிலைகள் நிறைவடைந்ததும், பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் மின்னணு-சான்றிதழ் வழங்கப்படும்.

### ஆ. வாசகம் எழுதும் போட்டி (Slogan Contest) :

மேற்குறிப்பிட்ட கருப்பொருளில் பிறரை ஊக்கப்படுத்தும் வகையிலும் அனைவரையும் கவரக்கூடிய வகையிலும், வாசகத்தை அமைத்து இப்போட்டியில் பங்கு பெறுலாம்.

### இ. பாட்டுப் போட்டி(Song Contest) :

பாரம்பரிய இசைப் பாடல்கள், தற்கால பாடல்கள், ராப் (Rap) போன்ற ஏதோவொரு வடிவத்தில் தெரிவிக்கப்பட்ட கருப்பொருளின் அடிப்படையில் புதிய பாடல்களை உருவாக்கி

இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். பற்கேற்பவர்களும் பாடகர்களும் தங்கள் விருப்பப்படி எந்தவொரு இசைக்கருவியையும் பயன்படுத்தலாம். பாடலின் கால அளவு மூன்று நிமிடங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**ஈ. காணொலிக்காட்சி தயாரிக்கும் போட்டி (Video Making Contest) :**

இந்தியத் தேர்தல்களின் பன்முகத் தன்மை மற்றும் தேர்தல் திருவிழாவை கொண்டாடும் வகையில் காணொலிக்காட்சி ஒன்றை உருவாக்குவதற்கு அனைத்து நிழற்படக் கருவி ஆர்வலர்களுக்கும் வாய்ப்பினை வழங்கும் பொருட்டு, போட்டியின் கருப்பொருள் தவிர, பின்வரும் தலைப்புகளிலும், போட்டியாளர்கள் காணொலி தயாரிக்கலாம். தகவலறிந்த மற்றும் நெறிசார்ந்த (Informed and Ethical Voting) வாக்களிப்பின் முக்கியத்துவம் (நேர்மையான வாக்களிப்பு) மற்றும் வாக்கின் வலிமை, பெண்கள், மாற்றுத்திறனாளிகள், மூத்த குடிமக்கள், இளைஞர்கள் மற்றும் முதல் முறை வாக்காளர்களுக்கு வாக்களிப்பின் முக்கியத்துவத்தை விளக்கும் விதமாகவும் இருக்கலாம். மேற்கண்ட கருப்பொருள் தொடர்பாக ஏதேனும் ஒன்றில் போட்டியாளர்கள் காணொலிக்காட்சி ஒன்றை உருவாக்க வேண்டும். அந்தக் காணொலிக்காட்சியானது ஒரு நிமிட கால அளவில் மட்டுமே இருக்க வேண்டும்.

காணொலி, பாடல் மற்றும் வாசகம் எழுதும் போட்டிகளுக்கான பதிவுகள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 22 மொழிகளில் ஏதாவது ஒன்றில் இருக்கலாம்.

**உ. விளம்பரப் பட வடிவமைப்புப் போட்டி (Poster Design Contest) :**

இந்தப் போட்டியானது, சிந்தனையைத் தூண்டக்கூடிய விளம்பரப் படம் தயாரிக்கும் கலை மற்றும் வடிவமைப்பில் ஆர்வமுடையவர்களுக்கானது. போட்டியாளர்கள் கருப்பொருள் குறித்த எண்மமுறை விளம்பரப் படம் (Digital Poster), ஓவியம் அல்லது கையால் வரையப்பட்ட விளம்பரப் படத்தினை அனுப்பலாம்.

**2. போட்டி வகைபாடுகள் (Contest Categorties):**

- நிறுவனம் சார்ந்த நபர்களுக்கான போட்டி வகை (Institutional Category) என்பது, தொடர்புடைய மத்திய அல்லது மாநில அரசு சட்டத்தின் கீழ் பதிவுப்பெற்ற பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்ற கல்வியியல் நிறுவனங்கள் / அமைப்புகள் ஆகியவை ஆகும்.
- தொழில் சார்ந்தவர் வகை (Professional Category) என்பது, காணொலிக்காட்சி உருவாக்குதல் / விளம்பரப் படம் வடிவமைத்தல் / பாடுதல் போன்ற ஏதேனும் ஒரு தொழிலினை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள் அல்லது காணொலிக்காட்சி உருவாக்குதல் / விளம்பரப் படம் உருவாக்குதல் / பாடுதல் போன்ற தொழில்களில் யாதொரு விதத்திலாவது பணிபுரிந்து அதன் மூலம் முதன்மை வருவாய் ஈட்டக்கூடியவர்கள்

தொழில் சார்ந்தவர்களுக்கான வகை என்று கருதப்படுகிறது. இதில் தேர்ந்தெடுக்கப்படுபவர் தான் தொழில் சார்ந்தவர் வகை என்பதை உறுதி செய்யும் பொருட்டு அதற்குரிய சான்றிதழை அனுப்ப வேண்டும்.

- **தொழில்சாராதவர் வகை (Amateur Category)** என்பது காணொலிக்காட்சி உருவாக்குதல் / விளம்பரப் படம் வடிவமைத்தல் / பாடுதல் போன்றவற்றை ஆக்கப்பூர்வமான ஒரு பொழுதுபோக்கிற்காக மேற்கொண்டு, ஆனால் தனது முதன்மை வருமானத்தை வேறு வழிகளில் இருந்து ஈட்டும் போட்டியாளர் பங்கேற்கும் வகை, தொழில்சாராதவர் வகை எனக் கருதப்படும்.

## 3. விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள் (Awards & Recognitions):

போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெறுவர்களுக்கு கீழ்கண்ட விபரப்படி ரொக்க பரிசுகள் வழங்கப்படும்:

### அ. பாட்டுப் போட்டி (Song Contest) :

| வகைபாடு | முதல் பரிசு (ரூ.) | இரண்டாம் பரிசு (ரூ.) | மூன்றாம் பரிசு (ரூ.) | சிறப்பு பரிசு (ரூ.) |
|---|---|---|---|---|
| நிறுவனம் சார்ந்த வகை | 1,00,000/- | 50,000/- | 30,000/- | 15,000/- |
| தொழில் சார்ந்தவர் வகை | 50,000/- | 30,000/- | 20,000/- | 10,000/- |
| தொழில்சாராதவர் வகை | 20,000/- | 10,000/- | 7,500/- | 3,000/- |

### ஆ. காணொலி காட்சி உருவாக்கும் போட்டி (Video Making Contest):

| வகைபாடு | முதல் பரிசு (ரூ.) | இரண்டாம் பரிசு (ரூ.) | மூன்றாம் பரிசு (ரூ.) | சிறப்பு பரிசு (ரூ.) |
|---|---|---|---|---|
| நிறுவனம் சார்ந்த வகை | 2,00,000/- | 1,00,000/- | 75,000/- | 30,000/- |
| தொழில் சார்ந்தவர் வகை | 50,000/- | 30,000/- | 20,000/- | 10,000/- |
| தொழில்சாராதவர் வகை | 30,000/- | 20,000/- | 10,000/- | 5,000/- |

### இ. விளம்பரப்பட வடிவமைப்பு போட்டி (Poster Design Contest):

| வகைபாடு | முதல் பரிசு (ரூ.) | இரண்டாம் பரிசு (ரூ.) | மூன்றாம் பரிசு (ரூ.) | சிறப்பு பரிசு (ரூ.) |
|---|---|---|---|---|
| நிறுவனம் சார்ந்த வகை | 50,000/- | 30,000/- | 20,000/- | 10,000/- |
| தொழில் சார்ந்தவர் வகை | 30,000/- | 20,000/- | 10,000/- | 5,000/- |
| தொழில்சாராதவர் வகை | 20,000/- | 10,000/- | 7,500/- | 3,000/- |

ஈ. <u>வாசகம் எழுதும் போட்டி</u> **(Slogan Contest):**

முதல் பரிசு - ரூ. 20,000/- இரண்டாம் பரிசு - ரூ. 10,000/- மூன்றாம் பரிசு - ரூ. 7,500/- . ஐம்பது பங்கேற்பாளர்களுக்கு தலா ரூ. 2000/-த்திற்கான சிறப்புப் பரிசு வழங்கப்படும்

**உ. வினாடி வினா போட்டி (Quiz Contest)**

வெற்றியாளர்களுக்கு ஊக்கப் பரிசாக இந்தியத் தேர்தல் ஆணையத்தின் பரிசுப்பொருள் மற்றும் அடையாள வில்லை வழங்கப்படும். பங்கேற்பாளர்கள் அனைவரும், போட்டியின் மூன்று நிலைகளை நிறைவு செய்ததன் பேரில் மின்னணு சான்றிதழைப் பெறுவார்கள்.

**6. பங்கேற்பதற்கான வழிமுறைகள் (Terms & Conditions)**

- போட்டிகளில் பங்கேற்பவர்கள் போட்டிகளின் விரிவான வழிகாட்டுதல்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை **https://ecisveep.nic.in/contest/** என்ற வலைதளத்தில் பார்வையிடலாம்.
- போட்டிகளில் பங்கேற்பவர்கள், போட்டிகள் தொடர்பான பதிவுகள் மற்றும் அதனுடைய விவரங்களை **voter-contest@eci.gov.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். பங்கேற்பாளர்கள் தாங்கள் கலந்துகொள்ள இருக்கும் போட்டியின் பெயர், மற்றும் பிரிவு, ஆகியவற்றை மின்னஞ்சலில் பொருள்(Subject) பகுதியில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- வினாடி-வினா போட்டியில் பங்கேற்பதற்கு, பங்கேற்பாளர்கள் போட்டிக்கான வலைதளத்தில் பதிவு செய்யலாம்.

போட்டி தொடர்பான அனைத்து பதிவுகளும் பங்கேற்பாளர்களின் விவரங்களுடன் இணைத்து, 15.03.2022 ஆம் தேதிக்குள் **voter- contest@eci.gov.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும் . மேலும், போட்டிகள் தொடர்பான வலைதளத்தை கீழ்க்கண்ட (QR Code) வாயிலாகவும் பார்வையிடலாம்.

இந்திய தேர்தல் ஆணையத்தினால் நடத்தப்படும் மேற்கண்ட போட்டிகளில் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பள்ளி, கல்லூரிகள், பாலிடெக்னிக் மற்றும் தொழில்பயிற்சி நிலையங்களில் பயின்று வரும் மாணவ மாணவியர்கள் மற்றும் அனைத்து வயது பொதுமக்கள், தொழில்முனைவோர் ஆகியோர் அதிகளவில் பங்கேற்று கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு சிறப்பினை தேடி தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/- G.S.சமீரன்
மாவட்ட தேர்தல் அலுவலர்
மற்றும் மாவட்ட ஆட்சியர்
கோயம்புத்தூர்

//உத்தரவுப்படி//

மாவட்ட தேர்தல் அலுவலர்
மற்றும் மாவட்ட ஆட்சியருக்காக
கோயம்புத்தூர்